www.tamilarangam.net

# புரட்சிகர சக்திகளின் ஐக்கியம்!

## மக்கள் ஜனநாயக சர்வாதிகார நிர்மாணத்தின் அடிக்கல்!!

*"மக்கள் புரட்சியை விரும்புவதும், நாடுகள் சுதந்திரத்தை விரும்புவதும், தேசங்கள் விடுதலையை விரும்புவதும் இன்றைய உலகின் பிரதான திசைபோக்கு."* எனவேதான் உலகில் பல நாடுகளில், குறிப்பாக பல தேசிய இனங்கள் உள்ள மூன்றாம் உலக நாடுகளில், ஒடுக்கப்படுகின்ற பல்வேறு தேசிய இனங்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தை முன் வைப்பது என்பது இன்றைய உலகின் பொதுபோக்காக உள்ளது. இன்றைய காலகட்டம் ஏகாதிபத்தியமும் பாட்டாளிவர்க்கப் புரட்சியும் ஆன காலகட்டமாதலால் மூன்றாம் உலக நாடுகளில் அனைத்து தேசிய இன விடுதலைகளுமே பாட்டாளிவர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின்பகுதியாக மட்டுமே இருக்கமுடியும். புதிய ஜனநாயகப் புரட்சி என்பது சோசலிசப் புரட்சியின் பகுதியே.

இவ்வகையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான சரியான திட்டத்தை முன்வைக்க வேண்டும். சமுதாய வளர்ச்சியின் தாரதம்மியத்தை தீர்மானிக்கும் அடிப்படையான முரண்பாடுகளையும், இவ் அடிப்படையான முரண்பாடுகளில், வளர்ச்சியின் தீர்மானகரமான பாத்திரத்தை வகிக்கும் முதன்மை முரண்பாட்டையும் நாம் வரையறுத்துக் கொள்ளல் வேண்டும். இங்கு சமுதாயப் புரட்சி செய்வதற்கு நான்கு அடிப்படை முரண்பாடுகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளது. *இன முரண்பாடு, ஏகாதிபத்தியத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, தரகு முதலாளிகளிற்கும் மக்களிற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபு அரைநிலப் பிரபுக்களுக்கும் மக்களிற்கும் இடையிலான முரண்பாடு* என்பனவே. இந் நான்கு அடிப்படையான முரண்பாடுகளிலும் சமுதாயத்தை மாற்றுவதற்கான இயக்கப் போக்கில் தீர்மானகரமான பங்கை வகிக்கும் முதன்மை முரண்பாடு தமிழ் தேசிய இனத்திற்கும் சிங்கள தரகு முதலாளித்துவ, அரை நிலப்பிரபு அரசிற்கும் இடையில் உள்ள முரண்பாடாகும்.

அடுத்து ஒரு புரட்சிகர யுத்தத்தை நடாத்துவதற்கு முன் நாம் எமது எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஏகாதிபத்தியங்களும் அவற்றின் அடிவருடிகளும் எமக்கு உதவும் என்ற தவறான போக்குகள் தமிழீழ விடுதலைக்காகப் போராடும் கட்சிகள் மத்தியிலும், தமிழீழ விடுதலையை ஆதரிப்போர் மத்தியிலும் காணப்படுகின்றது. உலக சமூகம் ஏகாதிபத்திய சுரண்டல் ஆதிக்கத்தால் அடிமைப்படுத்தப் பட்டிருக்கும் வரை இவ்வாறு சுரண்டி ஆதிக்கம் செய்வதில் முன்னணியில் நிற்கும் ஏகாதிபத்தியங்களும், அவற்றின் அடிவருடிகளும் உலக மக்களின் விடுதலைக்கும் உலகின் எந்த ஒரு தேசிய இனவிடுதலைக்கும் உதவமாட்டாது. எனவே, தமிழீழ விடுதலைக்கும் எதிராகவே வந்து நிற்கும். ரஷ்ய ஏவல் நாயான இந்தியாவும்; ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தின் நலனுக்காகவும் இந்திய ஆளும் வர்க்கங்களின் நலனிற்காகவும் தமிழீழ மக்களை அடிமைப்படுத்துவதாகவே அமையும். எனவே, தமிழ் தரகு முதலாளி, நிலப்பிரபு உட்பட (தமிழர் விடுதலைக் கூட்டணி) சிங்கள தரகு முதலாளி, நிலப்பிரபு வர்க்கங்களும்; அந்நிய ஏகாதிபத்தியங்களுமே எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிரிகள். இன்றைய கால கட்டத்தில் அதாவது மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிர்மாணிக்கும் கால கட்டத்தில் மக்கள் ஜனநாயக சர்வாதிகார நிர்மாண இலட்சியத்தை அங்கீகரிக்க, ஆதரிக்க அதில் பங்கு பற்றும் வர்க்கங்கள் வர்க்கத்தட்டுக்கள், சமுதாயக் குழுக்கள் எல்லாம் மக்கள் என்ற வகையை சேர்ந்தவை. மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை எதிர்க்கின்ற, மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசின் நிர்மாணத்தின் மீது பகைமை பாராட்டுகின்ற அல்லது அதற்கு சதி செய்கின்ற சமுதாய சக்திகள் சமுதாயக் குழுக்கள் எல்லாம் மக்களின் எதிரிகள். எனவே நாம் எமது எதிரிகளை இனம் கண்டு மக்களை அரசியல் மயப்படுத்தி நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

www.tamilarangam.net

இன்று அரசின் இன ஒடுக்குமுறை கூர்மை அடைந்துள்ள பொழுதில் நாம் என்ன நிலையை எடுக்க வேண்டும் என்பது தமிழீழ விடுதலைக்காக போராடும் புரட்சிகர கட்சிகள் மத்தியில் முதன்மை பெறும் பிரச்சனையாக உள்ளது. இன்று எமது தேசிய இன விடுதலைக்காகப் போராடும் கட்சிகள் மத்தியில் உள்ள முரண்பாடுகள் மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடு ஆகும். இவை பகையற்ற முரண்பாடுகளே தவிர நமக்கும் எதிரிக்கும் இடையில் உள்ள பகையுள்ள முரண்பாடு போன்றதல்ல. சித்தாந்த இயல்பு தழுவிய பிரச்சனைகளைத் தீர்க்கும் வழிகள் ஜனநாயக முறை, கலந்துரையாடல் முறை, விமர்சன முறை, இணங்கச் செய்தல், போதனை முறை என்பவையே. மாறாக பலாத்காரத்தையோ அல்லது அடக்குமுறையையோ பிரயோகிப்பதல்ல. எனவே, கட்சிகள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை இவ்வகையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டும். மாறாக சக கட்சிகளையோ, சக தோழர்களையோ எதிரிகள் போல நடத்துவது, எதிரிகளின் நிலைப்பாட்டை நாம் எடுப்பதற்கு சமமாகும். இன்றைய சூழ்நிலையில் எமது எதிரி நன்றாக பலம் அடைந்து கொண்டிருக்கிறான் என்பது ஒரு வெளிப்படையான விடயம் ஆகும். எனவே எதிரியைப் பலவீனப்படுத்தி எதிர்த்துப் போராடும் போராட்டத்தில் நாம் கட்சிகள் மத்தியில் ஓர் ஐக்கிய முன்னணி கட்ட வேண்டும்.

ஐக்கிய முன்னணி என்பது ஒரு பொது எதிரிக்கெதிராக பொது இலட்சியத்தை அடைவதற்கு அர்ப்பணித்துக் கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் சார்ந்த வர்க்கங்களின் கூட்டுறவேயாகும். ஐக்கிய முன்னணியானது, எதிரியின் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் தூக்கி எறிவதையும் மக்கள் ஜனநாயகத்தை நிறுவுவதையும் இலட்சியமாகக் கொண்ட மக்களால் ஐக்கிய முன்னணிக்கு சேவை செய்யும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் புரட்சியில் ஈடுபடுகின்ற அனைத்து சக்திகளையும் அணிதிரட்டி மக்களைப் பார்வையாளர்கள் அல்லாது பங்காளர்கள் ஆக்குவதற்கும், தொழிலாளர் தலைமையில் புரட்சிகரமான பாதையில் மக்களை கொண்டு செல்வதுமேயாகும். மேலும் தனித்தனி அமைப்பாக இருந்து எதிரியை எதிர்ப்பதால் எமது பலவீனத்தை எதிரிக்கு காட்டிக் கொடுக்கின்றதாக அமையும். ஆதலால் எதிரி தனது பலத்தை கூட்டிக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கியதாக அமையும். ஒன்றுபட்டு எதிர்ப்பதன் மூலமே எதிரியை நிலைதடுமாறச் செய்ய முடியும். அத்துடன் ஐக்கிய முன்னணி கட்டுதல் அவசியம் எனக் கூறிக்கொண்டு ஒருகட்சி இன்னோர் கட்சியினை பாவிக்கும் நிலை, கட்சியின் நலன்கள் ஐக்கிய முன்னணியினுள் ஆதிக்கம் செலுத்துதல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டியவை. எனவே, நாம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்படுவதன் மூலம் கட்சிகள் மத்தியில் உள்ள கருத்து வேறுபாடுகள் சித்தாந்த ரீதியாக வென்றெடுக்கப்பட்டு ஒரு சரியான சித்தாந்த ரீதியில் மக்களை அணிதிரட்ட வேண்டும்.

கடந்த காலங்களில் நடந்த புரட்சிகள் வெற்றி பெறுவதற்கு அவர்கள் கட்டிய ஐக்கிய முன்னணியே மிகமுக்கிய பங்காற்றியது. சீனாவில் புரட்சி வெற்றி பெற்றதற்கு அவர்கள் கட்டிய ஐக்கிய முன்னணியும், ஆயுதப் போராட்டமும், கம்யூனிஸ்ட் கட்சியுமே முக்கியமான காரணம் என்று தோழர் மாவோ ஒரு கட்டத்தில் குறிப்பிடுகின்றார். அதாவது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆட்சியில் இருந்த கோமிந்தாங் கட்சியும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஐக்கிய முன்னணியைக் கட்டியமை சீனப் புரட்சியின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். இதே போல் ஜேர்மன் பாசிசத்துக்கு எதிராக சோவியத் ரஷ்யா அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஓர் ஐக்கிய முன்னணியைக் கட்டியுள்ளது.

எனவே, மார்க்ஸீய, லெனினிய, மாவோ சிந்தனையின் வழிகாட்டலில் அனைத்துப் புரட்சிகர கட்சிகளையும், மக்களையும் ஓரணியில் திரளுமாறு தோழமையுடன் வேண்டுகின்றோம்.

**தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை.**